தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 10, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, சனவரி 23, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.''

உலக இயற்கை இருவேறு வகைப்படும் ; ஒருவர் செல்வ வளம் பெற்றவராக விளங்குவது வேறு; அறிவுத் தெளிவு உடையவராக விளங்குவது வேறு.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

இரும்பு விலை உயர்வு

* *1123*—திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1989 ஜனவரியில் மத்திய அரசு இரும்பு விலையை உயர்த்தியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) சிறு தொழில் உரிமையாளர்கள் பாதிக்கப்படுவதால், விலையைக் குறைக்க மாநில அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மத்திய அரசின் ஜாயிண்ட் பிளாண்ட் கமிட்டி (Joint Plant Committee) இரும்பு மற்றும் எஃகுப் பொருட்களுக்கான அடிப்படை விலையை 1989 ஜனவரித் திங்கள் முதல் உயர்த்தியுள்ளது.

[1990 சனவரி 23

(ஆ) இரும்பு எஃகுப் பொருட்களில் ஏறக்குறைய 83 வகைகள் உள்ளன. இந்த விலை உயர்வு பல்வேறு வகைகளுக்குத் தக்கவாறு 6 சதவீதம் முதல் 13 சதவீதம் வரை ஒரு டன்னுக்கு ரூ. 250 லிருந்து ரூ. 1,600 வரை பலவகைப்பட்ட இரும்பு எஃகு பொருட்களுக்கு விலை உயர்ந்துள்ளது.

(இ) இந்த விலை உயர்வு அகில இந்திய அளவில் செயல்படுத்தப்படுகிறது. எனவே முறையீடு ஏதும் செய்யப்படவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு திடீரென இப்படி இரும்பு மற்றும் எஃகுப் பொருட்களுடைய விலையை உயர்த்திவிடுகிற காரணத்தாலே, சிறு தொழில் முதலாளிகள் அல்லது சிறு தொழில் நிர்வாகிகள் மிகவும் பாதிக்கப்பட்டு, அரசுக்குக்கூட கோரிக்கைகளை வைத்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. அகில இந்திய ரீதியில் இல்லாவிட்டாலும், எல்லா மாநிலங்களிலும் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட நிலைமை எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்க, மத்திய அரசுக்கு நம்முடைய மாநில அரசு பரிந்துரை செய்து வலியுறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற முறையீடுகள் சிறுதொழில் நிர்வாகிகளிடமிருந்து மாநில அரசுக்கு வந்தால், மாநில அரசு மத்திய அரசுக்கு அது குறித்து பரிந்துரை செய்யும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சிறுதொழில் நிர்வாகிகள் மத்திய அரசுக்கு அந்த முறையீட்டைக் கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய நகலை மாநில அரசுக்கு அனுப்பியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த வகையில் நம்முடைய முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முன்பிருந்த மத்திய அரசு இரும்பு விலை உயர்வு குறித்து அதற்குரிய காரணத்தைக் குறிப்பிடும்போது, கோல் அண்டு கோக்—அதாவது கரியினுடைய விலை அதிகமாக உயர்ந்துவிட்ட காரணத்தால், இரும்பினுடைய விலை உயர்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது என்று குறிப்பிட்டிருக்கிறது. மத்திய அரசு ஏற்கனவே ஜனவரியில் எடுத்த அந்த முடிவை இப்போது பொறுப்பேற்றுள்ள மத்திய அரசு ஒருவேளை பரிசீலிக்குமா என்பதை இப்போது நான் முன்கூட்டியே சொல்ல இயலாது.

1990 சனவரி 23]

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சிறுதொழில் நிறுவனங்களுக்குத் தனியாகக் குறைந்த விலையில், குறித்த காலத்தில் தனி ஒதுக்கீடு பெற்றுத் தருவதற்கு நமது அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கனவே ஜாயின்ட் பிளான்ட் கமிட்டியின் ஒதுக்கீட்டில் 20 சதவீதம் அதாவது அரசிடமிருந்தோ அல்லது அரசைச் சார்ந்த நிறுவனங்களிடம் இருந்தோ, பெரிய தொழில் நிறுவனங் களிடமிருந்தோ பெறப்படும் ஆணைக்கு அவ்வப்போது உற்பத்தி செய்யப்படும் அளவுக்குத் தேவைக்கேற்ப ஒதுக்கீடு செய்யப் படுகிறது. எஞ்சியுள்ள 80 சதவீதம், அகர வரிசைப்படி சிறுதொழில் நிறுவனங்களுக்கு வினியோகிக்கப்படுகிறது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுதொழில் உரிமையாளர்கள் அவ்வப்போது ஏற்படும் இரும்பு விலை உயர்வினால் பெரிதும் பாதிக்கப் படுகின்ற காரணத்தால், அங்கீகரிக்கப்பட்ட சிறு தொழில் களுக்கு இரும்பு எக்சைஸ் வரி விதிப்பில் இருந்து சலுகை கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். அவர் களுக்கு அந்தச் சலுகை கொடுக்கப்பட, இந்த அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, முறைப்படி அதுகுறித்து முறையீடு மாநில அரசுக்கு வருமே யானால், மத்திய அரசு ஆராயவேண்டுமென்று மாநில அரசுக்கு முறையீடு வந்தால்—மாநில அரசு பரிசீலித்து, மத்திய அரசுக்கு அனுப்ப இயலும்.

9-05 மணி

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலத்தவர்கள் இத்தகைய சிறு தொழில் களைச் செய்ய அவர்களை ஊக்குவிக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பில்லாத வினா.

வொல்லாஸ்டோனைட் கனிமப் பொருள்

*1132—திரு. பொன். விஜயராகவன் :

மாண்புமிகு முதல்அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கள்ளி குளம் அருகிலுள்ள பிரான்மலைப் பகுதியில் சுண்ணாம்புக்கல் படிவத்திலிருந்து வொல்லாஸ்டோனைட் (Wollastonite) எனும் அரிய கனிமப் பொருள் கிடைப்பது அரசுக்குத் தெரியுமா?